From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 162 /2021

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Karuppasamyramesh | Father/Husband Name | : Pitchai |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 18.11.21. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் ஒத்தக்கடை நரசிங்கத்தில் வசிக்கிறேன். ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை நான் காவல் நிலையத்தில் வைத்து சம்பவம் முடிந்து 2 நாட்கள் கழித்து போலீசார் அடையாளம் காட்டி பார்த்தேன். கடந்த 07.08.2021ம் தேதி காலை 11 மணியளவில் எங்கள் வீட்டிற்கு நான் வேலைக்கு சென்றுவிட்டு வந்தபோது வீட்டின் கதவுகள் திறந்திருந்தது. பீரோ திறந்தநிலையில் இருந்தது. பொருட்கள் சிதறி கிடந்தது. பீரோவில் வைத்திருந்த 5 பவுன் எடையுள்ள கேரளா மாடல் கவர்னர் மாலையை காணவில்லை என்று வேலைக்கு சென்றிருந்த என் மனைவியிடம் கூறி அவரை வீட்டிற்கு அழைத்து வந்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகாரை என் மகன் சேதுபதி எழுதி படித்து காண்பித்தார். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். 2 நாட்கள் கழித்து என் நகை கிடைத்துவிட்டதாக காவல் நிலையத்திலிருந்து வந்த தகவலின்பேரில் காவல் நிலையம் சென்று எங்களது நகையை அடையாளம் காண்பித்து ஆஜர் எதிரிகளிடமிருந்து நகையை பெற்றதாக போலீசார் எதிரிகளை அடையாளம் காட்டினார்கள். அந்த நகையை நீதிமன்றத்தில் மனுச்செய்து பெற்றுச்சென்றோம். அந்த நகை நீதிமன்றத்தில் காட்டப்படுகிறது. அந்த நகையின் புகைப்படம் சா.பொ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:(3ம் எதிரிக்காக)

நான் சேர்ஆட்டோ ஓட்டுகிறேனா என்றால் ஆமாம். எந்த ஸ்டான்டில் என்றால் யோகநரசிங்கம்பெருமாள் கோயிலிலிருந்து மாட்டுத்தாவணிவரை.

எங்கள் ஸ்டான்டில்மொத்தம் எத்தனை வண்டிகள் உள்ளது என்றால் 80 வண்டிகள். போலீஸ் ஸ்டேசனுக்கு அடிக்கடி சவாரி செல்வேன் என்றால் அழைத்தால் போவேன். ஒரு சேர் ஆட்டோவில் அதிகபட்சமாக எத்தனை நபர்கள் ஏற்றலாம் என்றால் 3 நபர்கள். காணாமல் போனதாக சொல்லப்படும் நகை 916 நகையா, சாதாரண நகையா என்றால் 916 நகை. அந்த நகை வாங்கிய கடையின் பெயர் தெரியுமா என்றால் என் மகன் வாங்கிவந்தான் அதனால் எனக்கு தெரியாது. எவ்வளவு தொகைக்கு வாங்கினேன், எந்த தேதியில் வாங்கினேன் என்றால் 2 லட்சத்து 30 ஆயிரத்திற்கு 04.08.21ம் தேதி வாங்கினேன். நகை வாங்கும்போது நான் உடன் செல்லவில்லை என்றால் சரிதான், மகனிடம் கொடுத்து வாங்கினேன். நகை வாங்குவதற்கு எனக்கு பணம் எப்படி கிடைத்தது என்றால் நரசிங்கத்தில் சீட்டு கட்டி வந்தேன். அந்த சீட்டு கம்பெணியின் பெயர் என்ன என்றால் பெணகள் நடத்தி வந்த ஏலச்சீட்டு. அது எத்தனை ரூபாய் ஏலச்சீட்டு என்றால் இரண்ரை லட்சம் ரூபாய். நான் எத்தனாவது நபராக ஏலம் எடுத்தேன் என்றால் கடைசி நபர். மாத தவணை எவ்வளவு என்றால் முதல் மாதம் 7,500 அதன்பிறகு படிப்படியாக குறைந்து வரும், எத்தனை மாத தவணை என்றால் 23 மாதங்கள். என் வீட்டின் கிழக்கே மூர்த்தி மற்றும் சுரேஷ் வீடு உள்ளதா என்றால் சரிதான். மேற்கே சண்முகலெட்சுமி, கணேசன், ராஜா வீடுகள் உள்ளத என்றால் சரிதான். என் வீட்டு முன்பாக கிழமேல் ரோடு செல்கிறது என்றால் சரிதான். என் வீட்டிற்கு எதிர்புறத்தில் சசிக்குமார் வீடு உள்ளது என்றால் சரிதான். என் வீட்டின் நேர் எதிரே செல்வம் ஆஸ்பட்டாஸ் செட் உள்ளது என்றால் சரிதான், அது மாட்டு கொட்டகை. அந்த ரோட்டில் பகுதியில் இருப்பவாகள் நடந்து செல்வார்கள் என்றால் சரிதான். என் வீட்டின் முகப்பு வாசலில் கேட் போட்டுள்ளோமா என்றால் கேட் போடப்பட்டு அதன்பின்பு கதவு உள்ளது. கேட்டிற்கு ஒரு பூட்டு கதவிற்கு ஒரு பூட் என்றால் சரிதான். கதவிற்க அடி தண்டா உண்டா என்றால் கிடையாது. முன்னால் கேட்டில் போட்டிருந்த பூட்டு கோத்ரெஜ் பூட்டு என்றால் சரிதான். நான் எப்பொழுது வீட்டிலிருந்து கிளம்புவேன் என்றால் காலை 6 மணிக்கு. வீட்டின் உள்ளே உள்ள பீரோ கம்பெணி பீரோவா சாதா பீரோவா என்றால் சாதாரண பீரோ அதற்கு சாவி உண்டா என்றால் உண்டு. அதன் உள்ளே லாக்கர் சாவியுடன் உள்ளது என்றால் சரிதான். அன்றைய தேதியில் நான் நகையை லாக்கல் உள்ளே வைத்திருந்தேன் என்றால் சரிதான். லாக்கர் சாவியை எங்கு வைத்திருந்தேன் என்றால் பிரோவிற்கு மேலே. நான் லாக்கர் , பீரோ, கதவு மற்றும் கேட் ஆகியவற்றை பூட்டி சாவியை எடுத்துச்சென்றேன் என்றால்

என் மனைவி எடுத்துச்சென்றார். நான் 11 மணிக்கு வந்தபொழுது வீட்டை எப்படி திறந்தேன் என்றால் சாவியை எங்களுக்கு தெரிந்த அடையாளப்படுத்டதப்பட்ட பகுதியில் வைத்து செல்வது எங்கள் வழக்கம். அன்றைய தேதியில் சாவியை எடுத்து திறந்துதான் திருடிவிட்டு சென்றார்கள் என்றால் சரிதான். பீரோவிலும் சாவி பயன்படுத்திதான் திறக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான், எதுவும் உடைக்கப்படவில்லை. நான் சேர் ஆட்டோ ஓட்டுவதால் காவலர்களின் தயவு தேவை என்றால் சரிதான். சம்பவம் எதுவுமே நடைபெறவில்லை என்றாலும், போலீசார் என்மூலம் புகாரை பெற்றுக்கொண்டு நகையை மீட்டதாக காட்டினார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் தான் புகாரையே கொடுத்தோம்.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 162 /2021

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Ganesamoorthy | Father/Husband Name | : Pitchai |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 18.11.21. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் ஒத்தக்கடை நரசிங்கத்தில் வசிக்கிறேன். கார் ஓட்டுநராக வேலை செய்கிறேன். அ.சா.1 என் அண்ணன். ஆஜர் எதிரிகளை நான் காவல் நிலையத்தில் வைத்து 09.08.21-ம் தேதி போலீசார் அடையாளம் காட்டி பார்த்தேன். கடந்த 07.08.2021ம் தேதி காலை 11.15 மணியளவில் என் அண்ணன் அ.சா.1 என்னிடம் வந்து ஆட்டோ சவாரி சென்றுவிட்டு வீட்டிற்கு சாப்பிட வந்தபோது பீரோவிலுள்ள பொருட்கள் கலைந்து கிடந்ததாகவும், 5 பவுன் எடையுள்ள கேரளா மாடல் கவர்னர்மாலையை காணவில்லை என்று கூறினார். பின்னர் நாங்கள் அக்கம்பக்கத்தினரை விசாரித்ததில் தகவல் எதுவும் தெரியவில்லை. பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். 2 நாட்கள் கழித்து போலீசார் அழைத்து காவல் நிலையம் சென்றபோது எதிரிகளிமிருந்து கைப்பற்றிய என் அண்ணனின் நகையை அடையாளம் காட்டியபோது நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை: (3ம் எதிரிக்காக)

என்னுடையவீடு எங்குள்ளது என்றால் என் அண்ணன் வீட்டிற்கு அடுத்து என்னுடைய பெரிய அண்ணன்வீடு, அதற்கு அடுத்த வீடு. நான் எங்கு வேலை செய்கிறேன் என்றால் அருணா கம்பெணியில் டிரைவராக வேலை செய்கிறேன். அன்றைய தேதியல் நான் வேலைக்கு சென்றுவிட்டு மாலைதான் வீடு திரும்பினேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், அண்ணன் போன் செய்து சொன்னார். நான் என் அண்ணனுக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 162 /2021

Deposition of witness for: PW - 3

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : Angalaeaswari | Father/Husband Name | : | Karuppasamy Ramesh |
| Caste | : | Calling | : | |
| Religion | : | Age | : | |
| Date | : 18.11.21. | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் ஒத்தக்கடை நரசிங்கத்தில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1 என் கணவர். ஆஜர் எதிரிகளை நான் காவல் நிலையத்தில் வைத்து 2 நாட்கள் கழித்து போலீசார் அடையாளம் காட்டி பார்த்தேன். கடந்த 07.08.2021ம் தேதி காலை 11 மணியளவில் என் கணவர் அ.சா.1 என்னிடம் நான் விவசாய நடவு நட்டுக்கொண்டிருந்தபோது எங்களது வீட்டில் திருடுபோன விவரம் கூறினார். அக்கம் பக்கம் உள்ளவர்களை விசாரித்து விவரம் தெரியாததால் என் மகன் சேதுபதியை வரவழைத்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். புகாரை என் மகன் சேதுபதி எழுதினார். பின்னர் அந்த நகையை 10 நாட்கள கழித்து நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுச்சென்றோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை: (3ம் எதிரிக்காக)

சம்பவம் கேள்விப்பட்டு எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தேன் என்றால் 11.30 மணிக்குமேல் இருக்கும். அந்த நகை 916 நகையா சாதா நகையா என்றால் சாதா நகைதான், நகை வாங்கியது எந்த நகை கடையில் என்றால் அது ஆசாரியிடம் செய்யக்கொடுத்து வாங்கினோம். நகை எப்பொழுது வாங்கப்பட்டது என்றால் சம்பவத்திற்கு 10 நாட்கள் முன்பாக. அந்த நகை செய்வதற்கு எவ்வளவு பணம் செலவானது என்றால் எனக்கு தெரியாது, என் கணவருக்கும் மகனுக்கும்தான் தெரியும். பொதுவாக பெண்கள்தான் நகையை மாடல்களை பார்த்து செய்யச்சொல்வார்கள் என்றால் என் மகன் நகை கடையில் வேலை செய்வதால் அவரே மாடல் சொல்லிவிட்டார். நான்

வீட்டிற்கு வந்து பார்த்தபோது பூட்டுகள் எதுவும் உடைக்கப்பட்டிருந்ததா என்றால் கதவு திறந்திருந்தது. பீரோவும் உடைக்கப்படவில்லை என்றால் சரிதான். என் கணவர் எவ்வளவு ரூபாய் சீட்டு போட்டார் என்றால் தெரியாது, ஏலச்சீட்டு போட்டிருந்தார். எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது, கேள்விப்பட்டுதான் வந்தேன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் செல்லிதான் என் கணவர் புகார் கொடுத்தார் என்றாலும் அதற்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 162 /2021

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : Sethupathi | Father/Husband Name | : Karuppasamy Ramesh |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 18.11.21. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் ஒத்தக்கடை நரசிங்கத்தில் வசிக்கிறேன். தங்கமயில் ஜீவல்லரியில் விற்பனை பிரதிநிதியாக வேலை செய்கிறேன். அ.சா.1 என் அப்பா. ஆஜர் எதிரிகளை நான் காவல் நிலையத்தில் வைத்து 2 நாட்கள் கழித்து போலீசார் அடையாளம் காட்டி பார்த்தேன். கடந்த 07.08.2021ம் தேதி காலை 11 மணியளவில் என் அப்பா அ.சா.1 என்னிடம் போன்மூலம் எங்களது வீட்டில் கதவு திறந்து நகை திருடுபோன விவரம் என்னிடம் கூறினார். என்னிடம் காட்டப்படும் புகார் நான் எழுதியதுதான். 2நாட்கள் கழித்து திருடுபோன பொருளை அடையாளம் காண்பித்து பின்னர் அந்த நகையை 10 நாட்கள கழித்து நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுச்சென்றோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை: (3ம் எதிரிக்காக)

எத்தனை வருடங்களாக நகை கடையில் வேலை செய்கிறேன் என்றால் 6 வருடங்கள். நகையை பற்றி எனக்கு எல்லா விவரங்களும் அத்துப்படி என்றால் சரிதான். 916 நகைக்கும் சாதா நகைக்கும் என்ன வித்தியாசம் என்றால் 916 தரம் உயர்ந்ததாக இருக்கும் அதில் ஹால்மார்க் முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும். நகை எந்த கடையில் வாங்கப்பட்டது என்றால் என் அப்பா பணம் கொடுத்தார், நான் ஆசாரியிடம் கொடுத்து செய்து வாங்கினேன், நகை கடையில் வேலை செய்வதால் எனக்கு சேதாரத்தை பற்றி தெரியும், அதனால் ஆசாரியிடம் கொடுத்து செய்து வாங்கினேன். இந்த நகை சாதா நகையா 916 நகையா என்றால் 916 நகை. இந்த நகை செய்ய எவ்வளவு ரூபாய் கொடுத்தோம் என்றால் 2

லட்சத்து 30 ஆயிரம் ரூபாய். ஆசாரி ரசீது கொடுத்தாரா என்றால் சிட்டை எழுதி கொடுத்தார். சம்பவத்தன்று நான் வேலைக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். என் அப்பா போன்செய்து சம்பவத்தை பற்றி எனக்கு சொன்னார் என்றால் சரிதான். வீட்டில் கதவு, கேட், பீரோ எதுவும் உடைக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் அன்று மாலைதான் வீட்டிற்கு திரும்ப வந்தேன் என்றால் உடனடியாக தகவல் தெரிந்ததும் வந்துவிட்டேன். நகை வாங்குவதற்கு என் தகப்பனாருக்கு பணம் எப்படி கிடைத்தது என்றால் தெரியும், நரசிங்கத்தில் சீட்டு போட்டிருந்தார். அந்த சீட்டுகம்பெணியின் பெயர் தெரியுமா என்றால் ஆட்களிடம் போட்டிருந்தார், எத்தனாவது சீட்டாக என் அப்பா ஏலம் எடுத்தார் என்றால் கடைசி சீட்டு. நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், என் அப்பா ஒத்தக்கடை காவல் நிலையத்தில் செல்லப்பிள்ளை என்பதாலும் போலீசார் கேட்டுக்கொண்டதால் பொய்யாக புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. 07.08.21ல் ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் என் அப்பாவிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 162 /2021

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Ponnambalam | Father/Husband Name | : Nallakannu |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 18.11.21. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் ஒத்தக்கடை நரசிங்கத்தில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 07.08.21ம் தேதி மாலை 5 மணிக்குமேல் என் வீட்டின் அருகே ஒத்தக்கடை போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். படம் வரைந்து எழுதி சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் நானும் பிரபு என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:( 3-வது எதிரி தரப்பில் )

அ.சா.1 என் உறவினரா என்றால் சரிதான். போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கியதில் என்ன எழுதியிருந்தது என்று படிக்கவில்லை என்றால் சரிதான். 07.08.21ம் தேதி மாலை நான் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றாலும் 09.08.21ம் தேதி காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் இல்லை 07.08.21ம் தேதி சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக கூறுகிறார். அ.சா.1 என் உறவினர் என்பதால் இங்கு வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 162 /2021

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : Prabu | Father/Husband Name | : Manthiri |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 18.11.21. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் ஒத்தக்கடை நரசிங்கத்தில் வசிக்கிறேன். பிரஸ் நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 07.08.21ம் தேதி மாலை 5 மணிக்குமேல் போலீசார் வந்து அருகிலிருந்த வீடுகளை விசாரித்து படம் வரைந்து என்னிடமும் பொன்னம்பலம் என்பரிடமும் கையெழத்து வாங்கினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:( 3-வது எதிரி தரப்பில் )

அ.சா.1 என் உறவினரா என்றால் சரிதான். நான் லேத் எங்கு வைத்துள்ளேன் என்றால் வைக்கவில்லை, அதில் வேலை செய்கிறேன். லேத் எங்குள்ளது என்றால் மாட்டுத்தாவணியில் உள்ளது. பொதுவாக நான் வேலைக்கு சென்றுவிட்டு எத்தனை மணிக்கு வீடு திரும்புவேன் என்றால்மாலை 6 மணிக்கு. அன்றையதினம் வேலைக்கு சென்றிருந்தேனா என்றால் சென்றிருந்தேன். வேலைக்கு சென்றுவிட்டு எந்த வாகனத்தில் நான் வீட்டிற்கு திரும்புவேன் என்றால் இருசக்கர வாகனத்தில். அன்றையதினம் நான் எத்தனை மணிக்கு வீடு திரும்பினேன் என்றால் 6 மணிக்கு. நான் கையெழுத்து செய்ததில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் கேரளா மாடல் நகை என்று எழுதியிருந்தது. அதை பார்த்துதான் நான்கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். வேறு என்ன எழுதியிருந்தது என்றால் பக்கத்திலிருந்த வீடுகளை பற்றி எழுதியிருந்தது, கிழக்கு பக்கத்தில் சுரேஷ், வடகிழக்கு மூர்த்தி என்று எழுதப்பட்டிருந்தது. இதில் எழுதியது எல்லாம் காவல் நிலையத்தில் வைத்துதான் என்றால் சரிதான். 09ம் தேதி மாலை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்.